# வாக்குமூலம்

## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

## வழக்கு எண். SC.No. 78/2015

## வழக்கு சாட்சி: PW.9

## தேதி: 02.06.2023

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மகேந்திரன் | ஜாதி: | |
| தந்தை பெயர் : | பாலசுப்பிரமணியன் | தொழில்: | விஏஓ (ஓய்வு) |
| கிராமம்: | பார்த்திபனூர் | சமயம்: | இந்து |
| தாலுகா: | பரமக்குடி | வயது: | 64/2023 |

(எதிரி ஆஜர் இல்லை, எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் 07.01.2015 தேதி அன்று நான் மானாமதுரை வட்டம், கிருங்காக்கோட்டை குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். 07.01.2015 தேதி அன்று நானும் சிறுகுடி கிராம உதவியாளர் பாலசுப்பிரமணியனும் கிருங்காக்கோட்டை கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தோம். மதியம் சுமார் 02.00 மணியளவில் மானாமதுரை வட்ட ஆய்வாளர் என்னை கிருங்காக்கோட்டை பேருந்து நிறுத்தத்திற்கு வருமாறு அழைத்தார். நானும் சிறுகுடி கிராம உதவியாளரான என்னுடன் இருந்த பாலசுப்பிரமணியனும் மதியம் 02.15 மணியளவில் கிருங்காக்கோட்டை பேருந்து நிறுத்தத்திற்கு சென்றோம். அங்கு மானாமதுரை வட்ட காவல் ஆய்வாளரும் போலீசாரும் இருந்தார்கள். நான் எதற்காக என்னை அழைத்தீர்கள் எனக் கேட்டேன். வேலூர் ஒத்த வீட்டைச் சேர்ந்த பாண்டிதுரை என்பவர் 3 கொலைகள் செய்த வழக்கு சம்பந்தமாக வாக்குமூலம் தருவதாக கூறுகிறார் என காவல் ஆய்வாளர் என்னிடம் கூறினார். எதிரி பாண்டிதுரை வாக்குமூலம் கொடுத்தார். காவல் ஆய்வாளர் எதிரி பாண்டிதுரை கொடுத்த வாக்குமூலத்தை மடிக்கணினியில் தட்டச்சு செய்தார்.என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் தான் எதிரி பாண்டிதுரை கொடுத்தது ஆகும். அந்த வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வாக்கமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். எதிரி பாண்டிதுரை முருகபாஞ்சான் பாலத்திற்கு வருமாறு கூறினார். எதற்கு என்று நாங்கள் கேட்டதற்கு அங்கு அருவாளை வைத்திருப்பதாக பாண்டிதுரை கூறினார். அங்கு நானும் கிராம உதவியாளரும், காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார்கள் சென்றோம். அங்கு எதிரி பாண்டிதுரை பாலத்தின் கீழ் மண்ணிற்குள் புதைத்து வைத்திருந்த அருவாளை எடுத்துக் கொடுத்தார். என்னிடம்

காட்டப்படும் அருவாள் தான் எதிரி பாண்டிதுரை எடுத்துக் கொடுத்தது. அந்த அருவாள் **அ.த.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு பின்னீடு அத்தாட்சி தயார் செய்தார்கள். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சியிலும் நானும் உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அப்போது நேரம் மதியம் 03.00 முதல் 03.30 இருக்கும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் நடந்த விபரங்களை கூறினேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

07.01.2015 அன்று நான் கிருங்காக்கோட்டை கிராம நிர்வாக அதிகாரி ஆவேன். அன்றைய தினம் சிறுகுடி கிராம நிர்வாக அதிகாரியாக கூடுதல் பொறுப்பில் இருந்தேன். கொலை வழக்கு சம்பந்தமாக விசாரணைக்கு செல்லும் போது என்னுடைய மேலதிகாரியான வட்டாட்சியருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் தெரிவிக்க வேண்டும். நான் அதுபோல் எனது வட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்துவிட்டேன். நான் தெரிவித்த தகவலை காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் சொன்னேன். என்னை ஆய்வாளர் அழைத்ததின் பேரில் நான் விசாரணைக்கு சென்று வந்த விபரத்தை என்னுடைய பணிக்குறிப்பேட்டில் நான் பதிவு செய்யவில்லை. நான் சம்பந்தப்பட்ட இடத்திற்கு செல்லவில்லை என்பதால் தான் நான் பணிக்குறிப்பேட்டில் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியது போல் ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணினியில் பதிவு செய்யும் போது கிருங்காக்கோட்டை பேருந்து நிறுத்தத்தில் மின் வசதி இல்லை என்றால் சரிதான். முருகபாஞ்சான் பாலத்திலும் மின் வசதி இல்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை கிருங்காக்கோட்டையில் பிரிண்ட் எடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். முருகபாஞ்சான் ஆற்றுப் பாலத்தில் பிரிண்ட் எடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கிருங்காக்கோட்டையில் மின் வசதி இல்லாததால் எங்கு பிரிண்ட் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அங்கு வைத்து பேட்டரியில் வைத்து எடுத்து கொடுத்திருக்கலாம். அத்தாட்சியில் நான் எதற்காக கையெழுத்து செய்தேன் என்றால் அருவாளை கைப்பற்றியதற்காகவும் சாட்சி சொல்வதற்காகவும் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அத்தாட்சியில் நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியது போல் அருவாள் கைப்பற்றிய இடத்தில் வைத்து தான் நான் அத்தாட்சியில் கையெழுத்து செய்தேன். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட அருவாளின் நீளம், அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட அருவாளில் இரத்தக் கறை இருந்ததா என்றால் வெறும் மண்ணாக இருந்தது. நான் கையெழுத்து செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படித்து காண்பித்தார்கள் நான் படிக்கவில்லை. காவல்

ஆய்வாளரே அந்த ஒப்புதல் வாக்கமூலத்தை எனக்கு படித்துக் காண்பித்தார். எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் என் முன்பாக கொடுக்கவில்லை என்றும் காவல் ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்து என்னிடம் படித்துக் காண்பித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மட்டுமே நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலராக இருப்பதால் அடிக்கடி இதுபோன்ற வழக்குகளுக்கு நான் செல்வேனா என்றால் இந்த வழக்கிற்கு மட்டும் தான் சென்றேன். மற்றபடி காவல்துறையினர் எனக்கு நல்ல பழக்கம். காவல் துறையினர் எனக்கு நல்ல பழக்கமாக இருந்த காரணத்தினால் அவர்கள் அழைத்ததின் பேரிலும் நான் அரசு பணியில் இருந்ததின் பேரிலும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆய்வாளரால் தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் இட்டேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி சம்பவயிடத்தில் வைத்து எந்த ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் அ.த.சா.பொ.1 அருவாளை சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.